# நகர நிர்வாகமானது வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முன்பதிந்த சந்திப்பின் பேரில் திருமண உரிமங்களை வழங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 27, 2020) – இன்றைய தினம் தொடங்கி, நகர நிர்வாகமானது, வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முன்பதிந்த சந்திப்பின் பேரில் திருமண உரிமங்களை வழங்கத் துவங்கும். இதற்கு முன்னதாக இந்த திருமண உரிமங்கள், அவசரம் அல்லது கருணை அடிப்படையின்பேரில் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன.

திருமண உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு, குடியிருப்புவாசிகள் பின்வரும் செயற்படிகளை நிறைவேற்றவேண்டும்:

1. இங்கு முன்பதிந்த சந்திப்புக்கு ஒரு நேரம் வாங்கிக்கொள்ள வேண்டும்.
2. திருமண உரிமத்திற்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, அச்சுப்பிரதி எடுத்து விண்ணப்பதாரர் இருவருமே கையொப்பமிடுவதை (டிஜிட்டல் கையொப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை) உறுதி செய்ய வெண்டும். முன்பதிந்த சந்திப்புக்கு ஒருவர் மட்டுமே வரலாம்.
3. நேரம் குறிக்கப்பட்ட முன்பதிந்த சந்திப்பின்போது, பூர்த்தி செய்து கையொப்பமிடப்பட்ட திருமண உரிமத்தீற்கான விண்ணப்பத்தை, இதர தேவையான அனைத்து அடையாளம் மற்றும் விவாகரத்து (பொருந்தினால்) ஆவணங்களுடன் கொண்டு வரவும்.

அனைத்து தேவைப்பாடுகளுக்கும் குடியிருப்புவாசிகள் நகரின் இந்த வலைத்தளத்திற்கு வருகை புரியலாம்; ஏனெனில் ஏதேனும் தேவைப்படும் ஆவணம் இல்லாதுபோனால், திருமண உரிமம் வழங்க முடியாமல் போகலாம். தகவல்கள் அனைத்தும் பல மொழிகளில் கிடைக்கின்றன.

இந்தச் சமயத்தில் குறைந்த அளவு முன்பதிந்த சந்திப்புக்கள் மட்டுமே கிடைக்கப்பெறும்; போகிற போக்கில் நேரடியாக வந்து சந்திப்பது முடியாது. பொதுமக்களின் திருமண வைபவங்கள் இப்போதும் ரத்து செய்யப்பட்டதாகவே இருக்கும்.

கோவிட்-19 தொற்று பரவல் காலத்தின்போது குடியிருப்பு வாசிகள் மற்றும் அலுவலர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கருதி நகரின் செயல்பாட்டு சாளரங்கள் (counters) மூடப்பட்டே இருக்கும் .

நகரம் யற்றியுள்ள, கோவிட்-19 கட்டாய முகக் கவசங்கள் சட்டத்தின் கீழாக, நகர்மன்ற அரங்கில் நுழையும்போது, குடியிருப்புவாசிகள் மருத்துவம்-அல்லாத முகக் கவசங்களை அல்லது முகத்திரைகளை அணியுமாறு வேண்டப்படுகிறார்கள்; ப்ராம்ப்ட்டன் நகரின் பொது இடங்களில் இதனை அணிவது கட்டாயமாகும்.

மேலும் தகவல்களுக்கும், முன்பதிந்த ஒரு சந்திப்புக்காகவும் வருகை புரியவும்: www.brampton.ca.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுகிதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca